**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. STC 347 of 2017

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : சோபியா பானு

Father's Name : w/o முகமது ரபீக்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of June** 2025.

**முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது திருப்பூர் மாவட்டம் சாமுண்டிபுரம், குமார் நகரில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக உள்ளேன். இவ்வழக்கின் புகார்தாரர் உன்னி என்பவருடைய மனைவி என் அக்காவின் நண்பர். நான் வேலைக்காக எனது அக்காவிடம் கேட்டுக் கொண்டிருந்த பொழுது உன்னி என்பவருடைய மனைவி அப்பொழுது என் அக்காவிடம் பேசிக்கொண்டு இருந்தார். நான் என் அக்காவிடம் வேலை கேட்டு இருப்பதை கேட்டு தனது கணவர் உன்னி என்பவர் கல்லூரியில் canteen நடத்தி வருகிறார் என்றும், அவரிடம் ஹவுஸ் கீப்பிங் வேலை வேண்டுமென்றால் இருக்கும், வேண்டுமென்றால் போய் கேளுங்கள் என உன்னியின் மனைவி என்னிடம் கூறினார். நானும் எனது கணவரும் உன்னியை பார்ப்பதற்காக என் கணவரின் ஆட்டோவில் சென்றோம். கல்லூரி முன்னால் இருந்த ஆத்மாரிடம் உன்னி என்பவரை விசாரித்தோம். சிறிது தூரத்தில் இரண்டு நபர்கள் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். எங்களிடம் வாட்ச்மேன் அங்கு இரண்டு பேர் நிற்பவர்களில் ஒருவர் தான் உண்மையான என்னிடம் கூறினார்

2. ஆஜர் எதிரி ஜெயச்சந்திரன் உன்னி என்பவரை அடித்துவிட்டார். உன்னி கீழே விழுந்துவிட்டார். எனது கணவர் சண்டையை போய் தடுக்க சென்று எனது கணவர் உன்னி

என்பவரை சற்று தூரம் அழைத்து வந்து என்ன பிரச்சனை என கேட்டார். உன்னி என் கணவரிடம் எனது பணத்தையும் புடுங்கிவிட்டு என்னை அடிக்கவும் செய்கிறார்கள் என வருத்தத்துடன் சொன்னார். உன்னி கீழே விழுந்ததில் அவரது வலது கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது. எனது கணவர் அவரை மருத்துவமனைக்கு செல்லலாம் என அழைத்தார். உன்னி வேண்டாம் எனக்கு சொல்லிவிட்டு அருகில் இருந்த கிளினிக்கில் முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டார். பின்னர் சம்பவம் குறித்து அவரது மனைவிக்கு தகவல் சொல்லிவிட்டு நாங்கள் கிளம்பி விட்டோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்னுடைய பெயரை நிருபணம் செய்ய ஆதார் கார்டு தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் தாக்கல் செய்கிறேன். எனக்கு தேதி மாதம் ஞாபகம் இல்லை சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக இச்சம்பவம் நடைபெற்றது. சம்பவமானது காலை 10:30 மணி முதல் 11 மணிக்குள்ளாக நடைபெற்று இருக்கும். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், உன்னி சொல்லி தான் நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல.உன்னி எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.14 18:12:40 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**